## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 8. ஸ்ரீராமசந்த்ர பட்டர்

---

கோசல தேசம் [இன்றைய மத்ய ப்ரதேஷ்]
சரயூ ஆறு பாயும் செழித்த பூமி, ஸ்ரீராமசந்த்ரனின் மஹா புண்ய பூமி!
அங்கே அமலநேர் என்ற நகரில் வாழ்ந்த ஒரு அந்தணர் ராமச்சந்திரர்.
உண்மையான வேத மார்க்கம் காட்டும் வழியில் வேதம் ஓதுதல், வேத கற்பித்தல், லோக க்ஷேமம் வேண்டி யாகங்கள் செய்தல் ஆகிய தர்மங்களை மனைவியுடன் சேர்ந்து செய்தார்.
அன்பர்கள் தரும் காணிக்கைப் பொருளைக் கொண்டு எளிமையான வாழ்க்கை வாழ்கிறார்.தினமும் தனக்கு வேண்டிய உணவுக்கு உஞ்ச வ்ருத்தி செய்வார்.அதைக் கொண்டு உண்மையான ஏழை அன்பர்களுக்கும் ஹரி பக்தர்களுக்கும் உணவு தருவார்.

### போராடும் மனைவி

இவரது மனைவியும் இவரது கொள்கைக்கு எதிர்ப்பு சொல்லாமல் அதை ஏற்றுக் கொண்டு அமைதியாக வாழ்ந்தாலும், அவரது மனதில் பிற பெண்களைப் போல ஆசைகள் இருக்கத் தான் செய்தன.அவற்றுடன் அவர் போராடியதை மறுக்க முடியாது.

### அரச சீடன்

இவரது தூய வேத மார்க்கத்தையும் எளிய உண்மையான பக்தியையும் அறிந்த ஒரு சிறு அரசன் இவரையே மானசீக குருவாகக் கொண்டு ஒரு முறை இவரைக் கண்டு வணங்கி, தனக்கு குருவாக வழிகாட்டும்படி வேண்டினான்.

அரசனின் உறவால் தனக்கு செல்வம் வரும் என்று இவர் மனைவி விரும்பினாள், எதிர்பார்த்தாள்.பாவம்!அதுவும் உண்மையானது.ஒரு நாள் அரசனின் அனுமதியுடன் ராணி அவரை அரண்மனைக்கு அழைத்து உரிய உபச்சாரமும் மரியாதையும் செய்தார்.குருபக்னிக்கு உரிய அனைத்து காணிக்கைகளையும் அவர் சமர்ப்பித்தார்.

### பூர்ணாஹுதி ஆன காணிக்கைகள்

அன்று இரவு ராணி அளித்த அன்புக் காணிக்கைகளைக் கண்டு தன் மனைவி இன்னும் பக்குவம் ஆகாததை எண்ணி மனம் வருந்தினார் பட்டர்.மன மாற்றம் விரைவில் நினைத்தபடி ஏற்படாது என்ற உண்மையை அவர் அறிந்ததால் கோபம் கொள்ளவில்லை.

செய்யும் காரியங்களுக்கு பொருள் ரீதியான காணிக்கைகளைப் பெறும் போது அதன் மூலம் ஆன்மீக பலம் குறைவதை அவர் நன்கு அறிவார் அன்றோ? எனவே மறுநாள் ஹோமத்தில் இறைவனுக்கு உரிய பூர்ணாஹுதியாக அனைத்து காணிக்கைகளையும் யாகத்தீயினில் அர்ப்பணித்தார்.அவர் மனைவிக்குத் தான் செய்த காரியத்தின் வேகமும், கணவரின் செயலுக்கான அர்த்தமும் புரியவில்லை.

**"பொருள் ஆசையே இல்லாத மனதில் ஈஸ்வர பக்தி ஒன்று தான் நிலைக்க வேண்டும்!"** என்ற சங்கல்பத்தையே வ்ரதமாகக் கொண்டு வாழ அவர் முற்படுகிறார்.

இவ்விஷயம் அரசனுக்கு ராணிக்கும் தெரிய வருகின்றது.அரசன் தன் குருவின் உன்னத பக்தியையும் பொருள் ஆசையற்ற மனதையும் அறிவான்.அதை அவர் மனைவிக்கு உணர்த்த அவன் விரும்பி, குருவை சந்தித்துப் பேசினான்.

**"ஈஸ்வர சங்கல்பத்தால், பூர்வ ஜென்ம புண்யத்தால் மனிதன் லௌகீக வாழ்வுக்கு உரிய எதையும் பெற முடியும்! ஆனால் அதன் மூலம் ஜீவாதார சக்தி குறையும், முக்தி ஞானம் குறையும்!"** என்று அறிவுறுத்திய ராமச்சந்திரர், அப்போதே குருபேர தேவதைக்கு ஒரு ஹோமம் செய்தார், அதில் இருந்து தன் ஸ்ரத்தையான மந்த்ர பலனால் தீக்குள் இட்ட காணிக்கைகளை மீண்டும் வெளிக்கொண்டு வருகிறார்.இதன் மூலம் energy transformation பற்றிய ஞானமும் அரசனுக்குத் தரப்பட்டது.

**வேத மந்த்ரங்கள் மூலம் மனிதன் யாக-ஹோம காரியங்கள் மூலம் எதையும் பெறலாம்.ஆனால் எதைப் பெற வேண்டும் என்ற விழிப்புணர்வு நமக்கு இருக்க வேண்டும்.இக்காலத்தில் வேத காரியங்களில் வெறும் பொருளுக்கு என ஈடுபடும் பல அந்தணர்களுக்கு இது ஒரு பாடம்.அதே சமயத்தில் ஆச்சாரியர் ஸ்ரீமுக்கூர் நரசிம்ஹாச்சாரியார் போன்ற மிக உயர்ந்த வேத விற்பன்னர்களின் லோக க்ஷேமக் காரியங்களை முன் உதாரணமாகக் காட்டுகிறோம்.**

தெய்வம், பூஜைகள், வைதீஹ காரியங்கள் அனைத்தும் வெறும் லௌகீக இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் விஷயங்களாக மாறி இருக்கும் இக்காலத்தில் இவர் நம்மை சிந்திக்க வைக்கிறார்.

ஹரி ஓம்!